# 15 மணிநேர போதனை நிபந்தனைகளுக்கு எதிர்ப்பு

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தொலைபேசி எண். 49 — போன் 389

National Tamil Daily — தேசிய தினசரி

மலர் 10 இதழ் 109

யாழ்ப்பாணம் கீலக வைகாசி 17 ரபி: அவ் 2 வியாழக்கிழமை (30-5-68)

புன்னாலைக்கட்டுவன், புதன்

வாரமொன்றுக்கு ஜி. சி. ஈ. சாதாரண உயர்தர வகுப்புகளில் தாம் படிப்பிக்கும் பாடங்களிலும் அவற்றுடன் தொடர்பான பாடங்களிலும் 15 மணித்தியாலங்கள் போதிக்காத பட்டதாரி ஆசிரியர், பட்டதாரிச் சம்பளம் பெறத் தகுதியற்றவர்களாவர் எனக் கூறும் கல்வியமைச்சின் சுற்றுநிருபம் ஒன்று சட்டவிரோதமானது என்று யாழ்ப்பாணப் பிரபல வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்துள்ளாராம்.

ஆசிரியரின் சம்பளத்தை நிர்ணயிக்கும் விஷயங்கள் சுற்றுநிருபங்களுக்கு அப்பாற் பட்டவையென்றும், அவ்வாறு எப்பட்டதாரி ஆசிரியருக்காவது சம்பளம் குறைக்கப்பட்டால் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்ந்து நிச்சயமாக வெற்றி பெறலாமென்றும் அவர் அபிப்பிராயம் தெரிவித்திருப்பதாகவும் இதுபற்றி ஆசிரியர் சிலர் ஆலோசனை செய்துவருவதாகவும் அறியப்படுகிறது.

யாழ்ப்பாணம், வியாழன்

நாவாந்துறைப் பகுதியில் நடைபெற்ற குடிநல சுகாதார விழாவை ஆரம்பித்து வைத்த உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம், இப்பகுதியில் சுத்திகரிப்புவேலையில் ஈடுபட்ட நாவாந்துறை சென். நீக்கிலார் வாலிப முன்னணி அங்கத்தினர்களுக்குப் பாராட்டுத் தெரிவித்தார். [ஈ. நி.]

# வெள்ளை அறிக்கை வந்த பின்னரே அடுத்த நடவடிக்கை

## எதிர்க் கட்சியினர் தீர்மானிப்பராம்

கொழும்பு, புதன்

மாவட்டசபை பற்றிய வெள்ளை அறிக்கை பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுப்பதென்பது பற்றி எதிர்க்கட்சியினர் தீர்மானிக்கவிருக்கிறார்களெனத் தெரியவருகிறது.

வெள்ளை அறிக்கை என்ன என்பதை தெரிந்துகொள்ளாமல் அதை பகிஷ்கரிப்பது விவேகமான செயலல்ல என்று எதிர்க்கட்சி எம். பி. ஒருவர் சொன்னார்.

வெள்ளை அறிக்கை தயாரித்து முடிவடைந்துவிட்டதாகவும் இன்றிரவு இது பற்றி மந்திரிசபை பரிசீலனை செய்ததாகவும் அறியப்படுகிறது.

வெள்ளை அறிக்கைபார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டதும் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூடி ஆலோசனை செய்வர்.

ஆளும் கட்சிக் குழுவும் வெள்ளை அறிக்கை பற்றி விவாதிப்பதற்கு ஒரு நாள் அவகாசம் கேட்டிருக்கிறதாம்.

யாழ் மாவட்டத்துக்கு

## புதிய பாடசாலைகட்டடத்துக்கு பணம் ஒதுக்கப்படவில்லை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் இவ்வருடத்தில் எந்தப் பாடசாலையிலும்புதியகட்டடங்களைக் கட்ட அரசாங்கம் பணம் ஒதுக்கவில்லையாம். இதனால் இந்த நிதி வருடத்தில் புதிய கட்டடங்களுக்கு கல்வி இலாகா பணம் வழங்கமாட்டாது என கல்வி இலாகாவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுபற்றி நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ் மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளின் உபகரணங்களுக்கு இதுவரை 182,000 ரூபா செலவிடப்பட்டுள்ளதென்றும் இன்னும் உபகரணங்கள் செய்ய சுமார் ஒன்றரை லட்சம் ரூபா தேவைப்படுகின்றதென்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது. (ஈ. நி.)

# ஆணையாளர் ஆட்சி சட்டவிரோதமாம்

## வரியிறுப்பாளர் கூட்டத்தில் முன்னாள் நீதிபதி கருத்து

யாழ்ப்பாணம், விா.

'யாழ்ப்பாணம் மாநகர சபையை தற்போது ஆட்சி நடத்தும் 3 ஆணையாளர்கள் நியமனமும் சட்டத்துக்குப் புறம்பானது. சட்டரீதியில் இது மிகவும் பிழையானதாகும். இவர்களுக்கு யாழ்ப்பாண மாநகர சபையை நடாத்தும் எந்த அதிகாரமுமில்லை''

இவ்வாறு நேற்று மாலை யாழ். நகரமண்டபத்தில் நடைபெற்ற வரியிறுப்பாளர் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. எஸ். தனபாலசிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர சபையை உள்ளூராட்சி அமைச்சர் கலைத்து நேற்றுடன் இரண்டு வருடம் பூர்த்தியடைந்ததைத் துக்க தினமாகக் கொண்டாடும் பொருட்டு இக் கூட்டம் நடைபெற்றது. யாழ்.நகர மண்டபம் கறுப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர்கள் நிர்வாகத்தை உடனடியாகக் கலைத்து உடனடியாக தேர்தலை நடத்துமாறு திரு சி. குமாரசாமி பிரதமருக்கு அனுப்பி வைத்த தீர்மானம் இக் கூட்டத்திலும் வலியுறுத்தப்பட்டது.

திரு. தனபாலசிங்கம் மேலும் பேசுகையில் மாவட்ட சபை மசோதா நாட்டில் இனக்கலவரத்தையும், பூசலையும் உண்டுபண்ணுமாதலால் அரசாங்கம் மாவட்ட சபை மசோதாவைக் கொண்டு வருவதை ஒத்தி வைக்க வேண்டுமென்றார்.

திரு. சிறில் பேசுகையில் இந்தியா, அமெரிக்கா, பரிஸ் ஆகிய இடங்களில் வாலிபர்

[6-ம் பக்கம் பார்க்க]

# 'சமூககுறைபாடு நீக்கும் சட்டத்தை அமுலாக்குக'

## மரவரி முறையை நீடிக்கவும் கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

சமூகக் குறைபாடு நீக்கும் சட்டத்தை அமுல் நடத்துவதில் அரசாங்கம் தீவிர கவனம் எடுத்தல்வேண்டும். ஆலயப்பிரவேசத்தை தாமதியாது சட்ட மூலம் அமுலாக்க அரசாங்கமும் பொலிசாரும் உடனடியாக கவனம் செலுத்தவேண்டும்

வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்க 35-வது வருடாந்த மாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் திரு கே. ஐ. பூவிலிங்கம் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம், கிளிநொச்சி பட்டினசபைத்தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி திரு. ஜி. நல்லையா, திரு. எஸ். டபிள்யூ. பண்டிதா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள்.

கீழ்க்கண்ட தீர்மானங்களும் இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. சிறுபான்மைத் தமிழர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமூக நலனுக்காகவும் வடமாகாணத்தில் தொடர்ந்து மரவரிமுறையைநீடிக்க வேண்டுமென உள்நாட்டு அமைச்சர் திரு. டபிள்யூ தகநாயக்காவை கேட்டுக்கொள்கிறோம்.

மரவரி முறையின் கீழ் விலக்கப்பட்ட இடங்களில் மீண்டும் மரங்கள் கொடுக்க வேண்டுமென அரசாங்கத்தையும் உள்நாட்டு அமைச்சரையும் கோருகிறோம்.

## 250 பெண் பொலிஸார்

கொழும்பு, புதன்

250 பெண் பொலிசாரை புதிதாகத் திரட்டுவதற்காக அரசாங்கத்தின் அனுமதி வைக்கோருவதற்குபொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அஸிக் அபயகுணவர்த்தன தீர்மானித்துள்ளார்.

## அதிபர் டிகால்

பாரிஸ், மே 29

பிரான்ஸ் அதிபர் இன்று திடீரென்றுபாரிஸிலிருந்து தமதுசொந்த ஊருக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர் தமது ராஜினாமா பற்றி முடிவு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது

## சீனிவாங்க வந்தவன் .........

யாழ்ப்பாணம், வியா,

சீனிவாங்க பத்து ரூபாவுடன் அனுப்பப்பட்ட வேலைக்கார சிறுவன் ரயில் டிக்கட் வாங்கிக் கொண்டு கம்பி நீட்ட பார்த்தானும். வீட்டுக் காரர்கள் ரயில்நிலையத்தில் [illegible] மாலை யாழ். ரயில் நிலையத்தில் நடைபெற்றது.

தமிழக அமைச்சர்

# திருமதி சத்தியவாணிமுத்து மொரீஷியஸ் செல்கிறார்

புதுடில்லி, மே 29

தமிழ்நாடு அமைச்சர்களில் ஒருவரானதிருமதி சத்தியவாணிமுத்து மொரீஷியஸ் தீவுக்கு விஜயம்செய்யவிருக்கிறார். அந்நாட்டுஅரசாங்கமும அங்குள்ள இந்திய, தமிழ் இனத்தவர்களும் இவரை அங்கு அழைத்ததன் பேரில் அவர் அங்கு விஜயம்செய்கிறார். தமது விஜயம் அரசியல்சார்பற்றதென்றும் அன்புப்பயணமாகவே தாம் அங்குசெல்வதாகவும் நிருபர்களிடம் பேசுகையில் அவர் கூறினார்.

ஜூன் 3ம் திகதி தமிழ்நாட்டிலிருந்து புறப்படும் அவர் பம்பாய் சென்று மறுதினம் மொரீஷியஸ் தீவுக்கு அங்கிருந்து பயணமாவார்.

ஜூன் 11ந் திகதி மொரீஷியஸ் தீவிலிருந்து புறப்பட்டு மடகஸ்கார் சென்று, தென்னாபிரிக்கா வழியாக தாயகம்திரும்புவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

[தமிழ் மொழி 'அ' பாடத்திட்டத்திற்கான மாதிரி வினா விடைகள் நாளை (31-5-68) வெளிவரும்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஜீவ சேவையே சிவ சேவை. நம்புங்கள், இப்பணிகளுக்காக உங்களை அர்ப்பணியுங்கள் நமது இரத்தத்தை அளிப்பதால், மகத்தான வீரத்தொண்டர்களும், தெய்வத்தின் போர்வீரர்களும் தோன்றி உலகம் அனைத்தையுமே புரட்சி மூலம்புதுமையாக்குவார்கள்.

—சுவாமி விவேகானந்தர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 41 Jaffna
Telephone 389.

யாழ்ப்பாணம் கீலகவருஷம் வைகாசி மாதம் 17-ந்திகதி
(30-5-68)


## செலாவணிச் சான்றிதழ்

சென்ற வாரம் இலங்கைப் பிரதிநிதி சபையில் நிதி அமைச்சர் அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் மசோதாவைக் கொண்டு வந்து பேசுகையில், இத்திட்டத்தைக் கொண்டுவர வேண்டிய அவசியத்தை விளக்கினார். அவ்வப்போது நிலைமையைப்பற்றிப் பரிசீலனை செய்து மக்களுக்கு ஏற்படக்கூடிய வசதியீனங்களைக் குறைக்கவும், கமிட்டி பரிசீலனையில் சில திருத்தங்களைக் கொண்டு வருவதாகவும் உறுதிகூறினார்.

நமது ஏற்றுமதிமூலம் கிடைக்கும் வருமானம் குறைந்து, இறக்குமதிச் செலவு அதிகரித்து வருவதால், நாட்டுக்கு நஷ்டம் ஏற்பட்டு வருவதாயும் இதைத் தற்காலிகமாக சரிக்கட்ட இறக்குமதி செலாவணி கட்டுப்பாடுகளைத் தீவிரமாக்கியதாயும், ஆனால் விரும்பத்தக்க பலன் ஏற்படுவதற்குப் பதிலாக மக்களின் கஷ்டங்கள் அதிகரித்து, உள்நாட்டுக் கைத்தொழில் வளர்ச்சியும் தடைபட்டதால் புதிய முறைகளைக் கையாள வேண்டியதாயிற்றென்றும் இதற்காகவே அ. செ. உ. சான்றிதழ் திட்டத்தைக் கொண்டு வந்ததாகவும் சமாதானம் சொன்னார் நிதி மந்திரி.

பிரிட்டன் ஸ்டேர்லிங் மதிப்பைக் குறைத்ததைப் பின்பற்றி இலங்கையும் ரூபாயின் மதிப்பை சென்ற வருடம் நவம்பர் மாதம் குறைத்தது. ஆனாலும் இங்கு நிலைமை சீர்படவில்லை. ஆதலால் அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் என்ற பெயரால், இலங்கை தன் ரூபாயின் மதிப்பை மேலும் குறைக்க முன்வந்தது. இலங்கை ரூபாயில் கள்ளமார்க்கெட் இருப்பதாயும் அதை ஒழிக்கவே இத்திட்டம் கொண்டுவருவதாகவும் பிரதமர் கூறினார். அரசாங்கமே இதன்மூலம் கள்ள மார்க்கெட்டை சட்டபூர்வமாக்கி பெரும் லாபம் அடைவதுடன், முன்போல் ''உத்தியோகப்பற்றற்ற'' கள்ள மார்க்கெட் நடைபெற்று வருவதும் பகிரங்க ரகசியம்.

உலக வங்கி இலங்கைக்கு விசேஷ கடன் உதவி அளித்ததை ஆதாரமாகக் கொண்டு, அந்நியச் செலாவணிச் சான்றிதழ்களை அரசாங்கம் வெளியிட முடிகின்றது. ஒரு வாரத்துக்கு சுமார் ஒரு கோடி ரூபாய்வீதம் அரசாங்கம் இச்சான்றிதழ்களை விற்குமாயின், சில மாதங்களுக்குள் உலக வங்கிமூலம் பெற்ற செலாவணி கடன் உதவி தீர்ந்துவிடலாமென்றும் பின்னர் இலங்கை இத்திட்டத்தைத் தொடர்ந்து நடத்த முடியாதென்றும் சில நிபுணர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். நிலைமையின் போக்கை அவ்வப்போது அறிந்து தக்க திருத்தங்களைச் செய்யவோ அவசியமாயின் இத்திட்டத்தை அடியோடு விட்டு விடவோ அரசாங்கம் தயாராக இருக்கவேண்டும்.

இத்திட்டம் அமுலுக்கு வந்து மூன்று வாரமாகின்றதெனினும், இத்திட்டம் வேலைசெய்யும் முறை யாருக்கும் தெளிவாகவோ திட்டமாகவோ தெரியவில்லை. ஒரே குழப்பமாக உள்ளது. இது ஒருவித சூதாட்டம். இதில் குழப்பம் இருப்பது இயற்கையே. நம் அரசாங்கத்தின் மதிப்பு இதனால் அதிகரிப்பதற்கு பதில் குறையவே செய்யுமென்பதில் ஐயமில்லை. என்றாலும் பொதுமக்களுக்கு இதனால் நன்மை கிடைக்குமாயின், இத்திட்டம் அமுல் நடப்பதற்கு ஒருவித நியாயமுண்டு. இதன் பலாபலன்கள் சரிவரத் தெரியாத நிலையில் இது பற்றி திட்டமாக எதுவும் கூறுவதற்கில்லை.

ஆனால் இந்தியாவுக்கு இலங்கை விமானத்தில் சென்றாலும், விமானக் கட்டணங்கள் சுமார் இரட்டிப்பு அதிகரித்துள்ளதைப் பார்க்கிறோம். அந்நியச் செலாவணி சம்பந்தப்படாதிருந்தும் ஏன் இக்கட்டணத்தை இவ்விதம் உயர்த்த வேண்டுமென்று தெரியவில்லை. இதனால் மக்களில் பலருக்கு பிரயாண உரிமை உண்மையில் மறுக்கப்படுவதாகின்றது. இப்புதிய திட்டத்தால் ஏற்பட்ட முதல் பாதகம் இதுவாகும். பத்திரிகைகளுக்கான காகிதவிலையும் இப்படியே அதிகரிக்குமென்றும் சொல்லப்படுகிறது ஏற்கனவே காகிதவிலை மிக அதிகரித்து, சிறிய பத்திரிகைகளுக்கு பாதகம் ஏற்பட்டிருக்கையில், எக்காரணம் பற்றியும் பத்திரிகைக் காகித விலையை உயர்த்துவது நியாயமாகாது. இந்தியாவில் சிறப்பாக சிறிய பத்திரிகைகளுக்கு விசேஷ சலுகைகளை அரசாங்கம் அளித்து ஆதரிக்கின்றது. ஆனால் இங்கோ வரவர பத்திரிகைகளின் சங்கடங்களை அதிகரிக்கும்படியான காரியங்கள் செய்யப்படுகின்றன

ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தப்படி இந்தியா திரும்புபவர்களின் சேமிப்புப் பணத்தை புதிய திட்டத்தின் பெயரால் பாதிக்காமல் அனுமதிக்கவேண்டுமென்றும் கேட்கப்படுவதில் நியாயமுண்டு புதிய திட்டம் இங்கு மக்களை பாதிக்காத முறையில் தக்க திருத்தங்களைச் செய்ய அரசாங்கம் தயாராக இருக்குமென்று நிதிமந்திரி கூறியதுடன் பென்ஷன் முதலியவற்றுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுவது வரவேற்கத்தக்கது. இந்தத்திட்டம் தொடர்ந்து அமுல் நடத்தப்படத்தான் வேண்டுமாயின், கூடுமானவரை மக்களின் சங்கடங்களை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டியது வழியும்.

# சுகாதார பரிசோதகர்கள் வேலைநிறுத்தம் செய்யமுடிவு

அளவெட்டி, செவ்

இலங்கை பூராவிலும் உள்ள ஆயிரத்துக்கதிகமான சுகாதாரப் பரிசோதகர்கள் எந்நேரத்திலும் வேலைநிறுத்தமொன்றை மேற்கொள்ளலாம்.

இவர்களுக்கு அரசாங்கம் சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்காததே இவ்வேலை நிறுத்தத்தை இவர்கள் மேற்கொள்ள முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

வைத்தியசாலைகளில் சேவையாற்றும் தாதிகளும் மருந்து கலக்கும் ஊழியர்களும், மற்றும் பல பகுதிகளைச் சேர்ந்த ஊழியர்களும், சுகாதாரப் பரிசோதகர்களும் அடிப்படைச் சம்பளத்திலிருந்து அதிகரித்துத் தரும்படி அரசாங்கத்தை வேண்டியதையடுத்து அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கமிஷன் மற்றும் ஊழியர்களுக்கெல்லாம் 85ரூபா அடிப்படைச் சம்பளத்திலிருந்து 135 ரூபா தொடக்கம் 500 ரூபா வரையில் உயர்த்தியும் தமக்கு சம்பள உயர்வு வழங்காத காரணத்தாலே இம்முறை இலங்கையில் நடைபெறும் சுகாதார வாரத்தில் கலந்து கொள்வதில்லையென்றும், அடுத்து வேலை நிறுத்தத்தில் இறங்குவதெனவும் அகில இலங்கை சுகாதாரப் பரிசோதகர் சங்கம் [யூனியன்] தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இத்தீர்மானத்தை நாடு பூராவிலும் உள்ள சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அனுப்பி சுகாதார வாரத்தில் பங்கு பற்றாது வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ளத் தயாராயிருக்கும் படி கோரப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

[30 - 5 - 68]

வைகாசி மீ 17 உ

வியாழக்கிழமை

திதி- திருதியை மாலை5-57மேல் சதுர்த்தி

நட்சத்திரம்- திருவாதிரை பகல் 2-33 மேல் புனர்பூசம்

ராகுகாலம் - 1-22—2-52.

சுபநேரம் - 7-22—8-52.

இன்று பிறந்தவர்களுக்கு- விஷமிகள் தொல்லை தலைதூக்கும். வெற்றி உங்கள் பக்கமே இருக்கும். மேலிடத்து ஆதரவுடன் முன்னேற்றத்திற்கும் இடமுண்டு. தாய்வழிச்செய்திகள் சிறிது கவலையைத் தரலாம். சகோதர வழியாக உதவி கிடைக்கும். புனித ஸ்தலம் ஒன்றுக்கு யாத்திரை புறப்படும் சந்தர்ப்பமும் ஏற்படலாம். வீட்டில் சிறிது சலசலப்புத் தோன்றும் எல்லாம் நன்மையாகவே முடியும்.

மேஷம்- உண்மையால் உயர்வு. ஊக்க மிகுதி.

ரிஷபம்-கனக்கும் நெஞ்சம், கவலையின் தாக்குதல்.

மிதுனம்- பிரிவின் தாக்குதல், பின்தங்க தேடும்.

கடகம்-பிள்ளைப்பாசம். தொல்லை இன்பம்.

சிம்மம்-கரும்பாகஇனித்தது, வேம்பாகக் கசக்கும்

கன்னி- கற்றதால் பயன், கடவுள் நம்பிக்கை

துலாம்- தேனானவாழ்வு தேடியது கிடைக்கும்.

விருச்சிகம்- கருடப் பார்வை, காத்திருக்கும் பகை.

தனுசு- அன்பு வலை. ஆனந்த நிலை.

மகரம்- கண்துடைப்பு வேலை, கவனம்வேண்டும்.

கும்பம்- தந்தையின் கருணை, தடைகளும் விலகும்.

மீனம்- ஓடிவரும் உறவால் நாடிவரும் நன்மை.

[illegible]

## பழையதில் புதிய உப தபாற் கந்தோர்

யாழ்ப்பாணம், விசேஷ

யாழ்ப்பாணம் பழைய தபாற்கந்தோர் மீண்டும் ஒரு உபதபாற் கந்தோராக இயங்கவிருக்கின்றது. இத்தகவலை தபால்தந்தி அமைச்சு வடபகுதி அரசாங்க அதிபருக்கு தெரிவித்துள்ளது.

இவ்வருட இறுதியில் மீண்டும் உபதபால் கந்தோராகத் திறக்கப்படவிருக்கும் இந்நிலயத்தில் உயரியவிலை கொண்ட முத்திரைகள் மட்டும் விற்பனைசெய்யப்படும் எனத் தெரிகின்றது.

## சைவ மகாசபை பொன்விழா

காரைநகர், புதன்

காரைநகர் சைவ மகா சபை பொன்விழா அடுத்த மாதம் 3-ம், 4-ம் திகதிகளில் மேற்படி சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சென்னை திருக்கோயில் இதழாசிரியர் திரு. என். ஆர். முருகவேள் இரு நாட்களிலும் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

## அஞ்சலி

குரும்பசிட்டி, புதன்

யாழ் இலக்கிய நண்பர் கழகத்தினர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, கவிஞர் யாழ்ப்பாணன் ஆகியோரது மறைவு குறித்து அனுதாபக் கூட்டம் நடாத்தினர். இதில் திரு. க. மயில்வாகனம் பேசுகையில் 'பேச்சு வழக்கை ஆற்றல் இலக்கியத்தில் புகுத்தி ஈழத்து இலக்கிய மறுமலர்ச்சிக்கு பேராசிரியர் வித்திட்டுள்ளார். சங்கிலி நாடகநூல் அன்னாரின் ஆற்றலை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது' என்றார். திரு. பூ. செல்லத்துரை 'இலக்கியத்துறையில் மட்டுமின்றி சிறுவர்களுக்கான பாடநூல்களை வெளியிட்டு தமிழ் சிறார்களின் வளர்ச்சிக்கு அரிய பணியை கவிஞர் யாழ்ப்பாணன் ஆற்றியுள்ளார்' எனத் தெரிவித்தார்.

திருவாளர்கள் மா. பொன்னுத்துரை, இ. இராஜேந்திரன் ஆகியோரும் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

## 'அமெரிக்க உதவி'

உடுப்பிட்டி, புதன்

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியில் சென்ற திங்கட்கிழமை மாலை அமெரிக்க தகவல் பகுதியினரால் இலவச படக்காட்சி காண்பிக்கப்பட்டது. திருமதி கென்னடியின் இந்திய சுற்றுப் பிரயாணம், இலங்கையில் அமெரிக்க விவசாய உதவி, விண்வெளிப் பயணம்பற்றிய காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

# ஐயாறன் எழுதுவது

கொழும்பு 'டெயிலி நியூஸ்' பத்திரிகையில், மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் சம்பந்தமான ஒரு பெரிய படத்தையும் செய்தியையும் பார்த்தேன். வியப்பாகவும் மகிழ்ச்சியாகவுமிருந்தது.

கொழும்பிலுள்ள ஆங்கில சிங்களப் பத்திரிகைகள் பொதுவாக இந்துக்கள் சம்பந்தமான படங்களையோ, செய்திகளையோ வெளியிடுவதில்லை. சுவாமி சிவானந்தர் ரிஷிகேசத்தில் காலமான செய்தியை ராய்ட்டர் செய்தித்தாபனம் தெரிவித்தும், கொழும்பு ஆங்கிலத் தினசரிகள், அச்செய்தியை வெளியிடாமல் ஒதுக்கிவிட்டதை முன்னரே குறிப்பிட்டிருந்தேன்.

சமீபத்தில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் அதிபர் ஸ்ரீமத் சுவாமி வீரேஸ்வரானந்தாஜி மகராஜ், மலாயாவிலிருந்து இலங்கை வந்தபோது கொழும்பு ஆங்கிலப் பத்திரிகைகள் ஒரு படம் மட்டும் போட்டன. நன்றி. ஆனால் செனெட் தலைவர் ரத்னாயகா தலைமையில், வெள்ளவத்தை ராமகிருஷ்ணமிஷனில் நடந்த பெரிய வரவேற்புக் கூட்டத்தைப் பற்றியோ, பின்னர் அங்கு, ஸ்ரீமத் சுவாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற விசாக் பெருநாள் கூட்டத்தைக் குறித்தோ ஒரு செய்திகூட அவை வெளியிட்டதாகத் தெரியவில்லை. இன்னும் இப்படி எவ்வளவோ!

ஃ ஃ ஃ

ஆனால், மட்டக்களப்புக்கு ஸ்ரீமத் சுவாமி வீரேச்வரானந்தாஜி அவர்கள் சென்ற மாதம் விஜயஞ்செய்து அனாதைக் குழந்தைகளின் புதிய இல்லத்துக்கு அஸ்திவாரமிடும் படத்தையும், இது பற்றிய செய்தியையும் (ஒரு மாதம் கழித்தாவது) 'டெயிலி நியூஸ்' வெளியிடத் திருவுள்ளங்கொண்டது வரவேற்கத்தக்கது.

இந்த இல்லம் முதல்முதல் எங்கு ஆரம்பமானது தெரியுமா? நம் யாழ்ப்பாணத்திலே வண்ணார்பண்ணை பிரப்பங்குள வீதியிலுள்ள சிறுப்பர் மடமென்னும் கலாநிலயத்தில் தான். 1926ம் வருடம், சுவாமி அனந்தானந்தாஜி தலைமையில் அங்கு ஆரம்பிக்கப்பட்டபோது, யோகர் சுவாமிகள் ஒரு ரூபாய் கொடுத்து ஆசீர்வதித்தாராம்

முதலில் 6 மாணவர்களுடன் ஆரம்பமான இந்த இல்லம் பின்னர் கிழக்கு மாகாணத்திலே கல்லடி உப்போடைக்கு மாறியது. இப்போது 56 அனாதை மாணவர்கள் இதில் வாழ்ந்துவருகின்றனர்.

சுவாமி ஜீவனானந்தா அவர்களின் மேற்பார்வையில் நடைபெறும் இந்த இல்லம் மிகப் பழையது. சுகாதார வசதியில்லை. எந்த நேரம் இடிந்து விழுமோ என்ற கவலைக்கிடமான நிலையில் உள்ளது.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் நடத்திவந்த பள்ளிக்கூடப் பொறுப்பை அரசாங்கமே மேற்கொண்டதால் இப்போது அந்த மிஷன் சமூக, சமய சேவை சம்பந்தமான காரியங்களில் அதிக கவனம் செலுத்தப் புதிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாயும், ரூ. 2 லட்சம் செலவில் 75 குழந்தைகள் இருக்கக்கூடிய ஒரு கட்டிடத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாயும், அதற்கே, அதிபர் சுவாமி அவர்கள், மட்டக்களப்புக்கு விசேஷமாக

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸின் பொதுஜன வாக்கெடுப்புக்கான வாசகம் வெளியாகிவிட்டது

## நவீன கல்வி: நிர்வாகப்பரவல்: ஏழை மக்களுக்கு உதவி

பாரிஸ், மே 29

அடுத்த மாதம் பிரான்ஸில் பிரெஞ்சு அரசாங்கம் நடத்த உத்தேசித்துள்ள பொதுஜன வாக்கெடுப்புக்கான வாசகத்தைப் பிரெஞ்சு மந்திரிசபை நேற்று இங்கு வெளியிட்டுள்ளது.

ஜூன் மாதம் 16-ம் திகதி நடைபெறவிருக்கும் உத்தேச பொதுஜன வாக்கெடுப்புக்கான இந்த வாசகத்தின்மீது, பிரெஞ்சு ஜனாதிபதி டிகோல், தமது அரசியல் எதிர்காலத்தையே பணயம் வைத்துள்ளார்.

### வாசகத்தின் அம்சங்கள்

நேற்று வெளியிடப்பட்ட பொதுஜன வாக்கெடுப்புக்கான வாசகத்தில், கல்வியை நவீனமாக்குவதெனவும், அளவுக்கு மிஞ்சிய மத்திய நிர்வாகத்துக்கு ஒரு முடிவு காணுவதெனவும், ஏழை மக்களுக்கு உதவியளிப்பதெனவும்குறிப்பிடப்பட்டுள்ளது.

### ராஜினுமாச்செய்ய கோரிக்கை

இதற்கிடையில், மாணவர்கள், பிரெஞ்சு மந்திரிசபையை ராஜினுமாச்செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளனர்.

## நாடு திரும்ப அனுமதி மறுக்கப்பட்ட மாணவர் தலைவர் பாரிஸ் வந்தார்

வெளிநாட்டுக்குச் சென்றிருந்த மாணவர் தலைவர் திரு. டானியல், மேற்கு ஜெர்மன்—பிரான்ஸ் எல்லையைக்கடந்து, நேற்று பாரிஸ் வந்துசேர்ந்தார்.

அவரைப் பிரான்சுக்குத் திரும்பி வர அனுமதி அளிக்கப் பிரெஞ்சு அரசாங்கம் மறுத்திருந்தது.

மாணவர் தலைவர் டானியல், நேற்று சோபோனில், மாணவர்களிடையே பேசினுர்.

பிரான்ஸின் தொழிற்றுறை அமைதியின்மைக்கு முன்னேடியாகவிளங்கியதே மாணவர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்ட இயக்கம்தான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### அதிக நாட்கள் நீடிக்காது

பிரெஞ்சு அரசாங்கம் இன்னும் அதிக நாட்களுக்கு நீடிக்காது என்றே இங்குள்ள அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

---

தென் வியட்நுமில்

## 1030 அமெரிக்கர் கொலை; 10 கப்பல்கள் நாசம்

சைகோன், மே 29

தென்வியட்நுமில் நேற்று நடைபெற்ற தனிச் சண்டையொன்றில் 10 அமெரிக்கப் போர்க்கப்பல்களை மூழ்கடித்ததாகவும், 4 கப்பல்களுக்குத் தீ வைத்ததாகவும், கப்பல்களிலிருந்த 1,000 அமெரிக்கத்துருப்புக்களை அழித்ததாகவும் வியட்கொங்கியர் அறிவித்துள்ளனர்.

இச்சண்டை, மீகொங் டெல்டாப் பிரதேசத்தில் கடந்த திங்களன்று நடைபெற்றதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

## அமெரிக்க லூயிவில் நகரில் நீக்ரோக்கள் கலவரம்

வாஷிங்டன், மே29

அமெரிக்காவில் கென்டுக்கி மாகாணத்தில் லூயிவில் என்னுமிடத்தில் நேற்றிரவு தொடர்ந்து மூன்ருவது இரவாக நீக்ரோக் கலவரங்கள் நடந்தன.

நீக்ரோக்கள் கற்களை விசி தெருக்களில் ஆர்பாட்டம் செய்தனர். அவர்களை அடக்கத் தேசிய காவற்படையினர் அழைக்கப்பட்டனர்.

கலவரக்காரர்மீது பொலிசார் சுட்டபோது நீக்ரோ ஒருவர் படுகாயமடைந்தார். சில ஆர்பாட்டக்காரர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

லூயிவில் நகரில் இரவில் முழுநேர ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### வெங்காயச் செய்கையாளர் கஷ்டம்

சுழிபுரம், புதன்

வெங்காயச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் கமக்காரர்கள் வேண்டிய உரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமல் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கின்றனர்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வேண்டிய உரத்தை முன்கூட்டியே பெற்று வைக்காததினுல்தான் இந்நிலை ஏற்பட்டுள்ளது என தெரியவருகின்றன.

### ஆலய உற்சவம்

சங்கானை, புதன்

சங்கானை வெல்லிக் முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம்நாளைகொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 8-ம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும். மறுநாள் தீர்த்தோற்சவத்துடன் விழா பூர்த்தியடையும்.

### இணைப்புக்கு ஆட்சேபம்

சுழிபுரம், புதன்

தொல்புரம் கிராமசேவையாளர் பிரிவுடன் இதுவரை காலமும் இருந்துவந்த நெல்லியான் கிராமம், புதிய ஒழுங்கின்படி சுழிபுரம் கிராமசேவையாளர் பிரிவுடன் இணைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை நெல்லியான் கிராமத்தில் வாழும் மக்களில் பலர் எதிர்ப்பதுடன் இருந்துவந்த அமைப்புப் போல் இருக்க வேண்டும் என வேண்டியுள்ளனர். நெல்லியான் கிராமத்தில் வாழும் பலர் கையொப்பமிட்ட ஒரு மகஜரை அரசாங்க அதிபருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

### ரூ. 100 நஷ்டஈடு

குரும்பசிட்டி, புதன்

உடுப்பிட்டியைச் சேர்ந்த எஸ். தியாகராசா கடந்த வருடம் ஆடி மாதம் 28-ம் திகதி ஆர். பாலர் என்பவருக்கு சொந்தமான ரூபா 240 பெறுமதியான கிணறு வெட்டும் உபகரணங்களைக் களவாடியதாக சுன்னுகம் பொலிஸாரால் தொடரப்பட்டிருந்த வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது மாஜிஸ்திரேட் எதிரியை வழக்காளிக்கு ரூ. 100 நஷ்டஈடு வழங்குமாறும்ஒருவருட கால நன்னடத்தையில் இருக்குமாறும் உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

---

# சமஷ்டி நைஜீரிய - பியாவ்ரா பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தைகள்

## தொடர்ந்து இரகசியமாக நடத்த உடன்பாடு

காம்பாலா, மே 29

உகாண்டாத் தலைநகரில் கூடிச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்திவரும் சமஷ்டி நைஜீரிய, பிரிவினை 'பியாவ்ரா'ப் பிரதிநிதிகள் கோஷ்டிகள், தமது பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இரகசியமாக நடத்துவதென ஒப்புக்கொண்டுள்ளன.

இப்பேச்சுவார்த்தைகளில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யக் காரியதரிசி திரு. ஆர்னேல்ட் ஸ்மித்தும்கலந்துகொண்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, சமஷ்டி நைஜீரியா தெரிவித்திருந்த சில ஆலோசனைகள்பற்றிக்குறிப்பிடுகையில், 'அவை முற்று முழுதான சரணுகதிக்கு வழிவகுப்பதாக'ப் பியாவ்ராப் பிரதிநிதிகள் கருத்துவெளியிட்டனர்.

## செஞ்சிலுவைச் சங்கத்தின் கோரிக்கைக்கு மறுப்பு

லாகோஸ், மே 29

இதற்கிடையில், சமஷ்டி நைஜீரியத் தலைநகரான லாகோஸிலிருந்து கிடைக்கும் செய்திகள், கிழக்கு நைஜீரியாவான பியாவ்ராவுக்கு நிவாரணம் வழங்குமுகமாகப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்குத் தடையாகவிருக்கும் சமஷ்டி நைஜீரியாவின் கப்பற்படை முற்றுகையை நீக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விடுத்திருந்த கோரிக்கையைச் சமஷ்டி நைஜீரியா மறுத்துவிட்டதாகக் கூறுகின்றன.

வேண்டுமானுல், விமான மூலம் நிவாரணப் பொருட்களை இறக்கிவிடலாம் என சமஷ்டி நைஜீரிய அரசாங்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

பியாவ்ராவின் கருவியாகப் பயன்படுத்தப்படத் தன்னை அனுமதித்துக்கொள்வதாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின்மீது சமஷ்டி நைஜீரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

### நேரு பற்றிய ஆசிய கருத்தரங்கு

புதுடில்லி, மே.29

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ஜவஹர்லால்நேருவின் பிறந்ததினமாகியநவம்பர் 14-ம் திகதியன்று அவரைப் பற்றிய ஆசிய கருத்தரங்கு ஒன்று புதுடில்லியில் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலோசனையைத் தற்போதைய பிரதமரான திருமதி இந்திரா காந்தி கொள்கையளவில் அங்கீகரித்துள்ளதாகவும் இக்கருத்தரங்கில் பங்குபற்ற உயர் ஆசிய தலைவர்கள் அழைக்கப்படலாமென எதிர்பார்க்கப் படுவதாகவும் கூறப்படுகிறது.

### திருப்பதி விபத்தில் மேலும் ஒருவர் பலி

திருப்பதி, மே 29

நேற்றுத் திருப்பதியில் நடந்த ரயில் விபத்தில் இறந்தோர் தொகை இப்போது 13 ஆக உயர்ந்துள்ளது.

பிரயாணிகள்ரயிலொன்று சரக்கு ரயிலுடன் மோதியதன் விளைவாக முன்னர் 12 பேர் உயிரிழந்தனரெனவும் 88 பேர் காயமுற்றனர் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

### காணுமற்போன அமெரிக்க கப்பல் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை

வாஷிங்டன், மே.29

மத்தியதரைக் கடலிலிருந்து அமெரிக்கா திரும்பிக்கொண்டிருந்த வழியில் 99 பேருடன் காணுமற் போய்விட்ட அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பலான 'ஸ்கோர்பியன்' இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

அக்கப்பலை கண்டுபிடிப்பதற்கான கடல் வானதி தேடுதல் முயற்சிகள் தொடர்ந்து நடைபெறு[illegible]

---

வியட்நும் தீர்வில்

# போரில் ஈடுபட்டுள்ள சகல நாடுகளுக்கும்பங்கிருக்கவேண்டும்

## அமெரிக்கா, ஆஸ்திரேலியா வலியுறுத்தல்

வாஷிங்டன், மே 29

வியட்நும் போரைத் தீர்க்கும் எந்த ஒரு சமாதான உடன்படிக்கையிலும் வியட்நும் போரில் பங்குபற்றும் சகல நாடுகளுக்கும் பங்கு இருக்கவேண்டுமென அமெரிக்க ஜனுதிபதி ஜோன்ஸனும், ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. கோட்டனும் ஓர் இணைப்பறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

பசிபிக் சமுத்திரப் பிரதேசத்தில், இரு நாடுகளும் தொடர்ந்து ஒத்துழைக்க வேண்டுமெனவும் இரு தலைவர்களும் தமது இணைப்பறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

தென் கிழக்காசியாப் பகுதியிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் விலகவிருப்பதால், அப்பிராந்தியத்தை சேர்ந்த நாடுகளிடையே அதிக அளவிலான ஒத்துழைப்பு இருக்கவேண்டியது அவசியமாகிறதெனவும் அந்த இணைப்பறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாஷிங்டனுக்கு விஜயஞ் செய்திருந்த ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. கோட்டன், அமெரிக்க ஜனுதிபதி ஜோன்ஸனுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் முடிவிலேயே இந்த இணைப்பறிக்கை வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சுருட்டுத் தொழிலை குடிசை கைத்தொழிலாக்குக"

யாழ்ப்பாணம், வியா.

சுருட்டுத்தொழிலை குடிசைக்கைத்தொழிலாக்கும்படி யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், கைத்தொழில்மந்திரி திரு பிலிப்குணவர்த்தனவிற்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: கூட்டுறவுசங்கங்களின் மூலம் நாடு முழுவதும் ஒரே விலைக்கு சுருட்டுக்களை விநியோகம்செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சுருட்டுத்தொழில் நடத்தும் முதலாளிமார் லைசென்ஸ் எடுக்கவேண்டும். இதன்மூலம்சுருட்டுத்தொழிலாளர் நன்மையடைவர்.

தொழில்மந்திரி ஜனப்பமகமத்திற்கு திரு. ஜி ஜி. பொன்னம்பலம் எழுதியுள்ள கடிதமொன்றில் சம்பளநிர்ணய சபையை கூட்டி சுருட்டுத்தொழிலாளரின் கூலியைத் தீர்க்க வேண்டுமென்றும் கூலி தீர்க்கும்போது, தரத்தை கவனிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

## 'நோக்கம் நிறைவேறவில்லை'

உடுப்பிட்டி, புதன்

"சனசமூக நிலையங்களை எந்த நோக்கத்துடன் ஆரம்பித்தார்களோ அந்த நோக்கம் இன்று வரை நிறைவேறவில்லை. பாமர மக்களும், எழுத்து வாசனை அற்ற மக்களும் வெளியூர்களில் நடக்கும் புதினங்களைச் சுலபமாக அறிந்து கொள்ளும் முகமாகவே அரசாங்கம் இந் நிலையங்களை ஆரம்பித்த நன்கொடைகளையும் கொடுத்து வருகின்றது."

இவ்வாறு கரணவாய் வடக்கு, நவிண்டில் கலைமதி சனசமூக நிலைய அங்குரார்ப்பணக் கூட்டத்தில் வடமராட்சிச் சனசமூக நிலையங்களின் சமாஜச் செயலாளர் திரு. சி. செல்லையா கூறினார்.

திரு. செல்லையா மேலும் பேசுகையில், "ஒரு வீட்டுக்கு வேலியும், ஒரு பெண்ணுக்குத் தாலியும் அவசியம். அது போலவே ஒரு கிராமத்திற்கு வாசிகசாலை அத்தியாவசிய என்றார்."

## தர்மகர்த்தா சபை நிர்வாகிகள்

அளவெட்டி, புதன்

அகில இலங்கை தர்மகர்த்தாக்கள் சபைக் கூட்டம் சீமெலையில் பிரம்மஸ்ரீ து. துரைச்சாமிக்குருக்கள் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சு. துரைச்சாமிக்குருக்கள், செயலாளர் செ. யோகேந்திரம், உப செயலாளர் சி. விஸ்வநாதன், பொருளாளர் வி. கனகரத்தினம்.

21 பேர்கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## ஆசிரிய கலாசாலை பிரவேசப் பரீட்சை

உடுவில், புதன்

ஆசிரிய கலாசாலை விசேஷ பயிற்சிகளுக்கான பிரவேசப் பரீட்சைகள் ஆகஸ்ட் மாதம் 26-ம் திகதி நடைபெறும் எனவும், இப்பரீட்சைக்கான விண்ணப்பப் பத்திரங்கள் ஜுலை 16-ம் திகதிக்கு முன்னர் பரீட்சாதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## துணை பொலிஸ் அதிபர்

யாழ்ப்பாணம், வியா.

வடபகுதிக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டிருந்த துணை பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஈலியன் பெர்ஞண்டோ நேற்று முன்தினம் காலை கொழும்பு திரும்பினார்.

வல்வெட்டித்துறை புதிய பொலிஸ் நிலையம் அமைக்கப்படவிருக்கும் காணியையும் பொலிஸ் சுப்ரின்டென் திரு. ஆர். சுந்தரலிங்கத்துடனும், உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. லியனகேயுடனும் நேற்றுச் சென்று பார்வையிட்டார். [கா. நி.]

## அங்குரார்ப்பணம்

நெடுங்கேணி, புதன்

வவனியா மாவட்டத்தில் உள்ள 11 தெசவு நிலையங்கள் ஒன்று கூடி ஒரு சங்கத்தை அமைத்துள்ளனர்.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு ஜே இராசரத்தினம், உப தலைவர்:- செல்வி வி. சரஸ்வதி, காரியதரிசி எஸ். குமாரசுவாமி, தனாதிகாரி செல்வி கே. வி. சிம்மெனிக்கே. 9 அங்கத்தவர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## உற்சவமும் இசைவிழாவும்

கொழும்பு, புதன்

ஸ்ரீ தியாகராஜசுவாமிகள் உற்சவமும், இசைவிழாவும் ஜூன் மாதம் 20-ந் திகதி முதல் 24-ந் திகதி வரை வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் மாணிக்க விநாயகர் ஆலய மண்டபத்தில் கொண்டாடப்படவிருக்கிறது.

## 'அறிவிக்கவும்'

அளவெட்டி, புதன்

'குடியேற்றத்திட்டங்களுக்கு ஆட்கள் எடுக்கும்போது காரைநகர் மக்களுக்கும் அறிவிக்கவும்' எனக் காரைநகர் இளைஞர் விவசாயக் கழகத் தலைவர் திரு. வே. சண்முகநாதன் அரசாங்க அதிபர் திரு. வேரிணன் அபயசேகராவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## நகைகள் திருட்டு

அளவெட்டி, புதன்

கதிர்காமத்துக்குச் சென்றுள்ள தனது மகளது வீட்டை யாரோ உடைத்து வீட்டிலிருந்த தங்க நகைகளையும், சேலைகளையும், மற்றும் உடுப்புகளையும், மணிக்கூடு முதலான சுமார் ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்களையும் திருடிவிட்டதாக புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திரு. துரைச்சாமிக்குருக்கள் சுன்னாகம் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

## நியமனம்

சுழிபுரம், புதன்

திரு. என். சுப்பிரமணியம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கைவினையாசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். அங்கு கைவினையாசிரியராகக் கடமையாற்றிய திரு. கு. பொன்னுத்துரை விசேட பயிற்சிக்காக சென்றுள்ளார்.

## குடிநலவார இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மாநகர சபையினரால் நடாத்தப்படும் குடிநல சுகாதாரவார விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் விபரம் பின்வருமாறு:

காலை 7 மணி: 5-ம், 6-ம், 15-ம் வட்டாரங்கள் சுத்திகரிப்பு இயக்கவேலை.

மாலை 2 மணி: யுபிலி சௌக்கிய நிலையத்தில் ஆரோக்கியமான குழந்தைகளைத் தெரிவுசெய்தல்.

மாலை 6-30 மணி: யாழ். திறந்த வெளியரங்கில் இலவச திரைப்படக்காட்சி. [கா. நி.]

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி பரிசளிப்பு விழா இம்மாதம் 31-ம் திகதி நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராகக் கனடாத் தூதுவர் ஜான் திம்மரினும் அவரது பாரியாரும் கலந்துகொள்வர்.

## புதிய டாக்டர்கள்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கம்பனையைச் சேர்ந்த இ. இராசரத்தினம், சுழிபுரம் நடுவைச் சேர்ந்த எஸ். பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரும் டாக்டர்களாகசித்தியடைந்துள்ளார்கள்.

## பறந்த ஜோடிகள்

சங்கானை, புதன்

சங்கானை பொலிஸ் எல்லைக்குட்பட்ட இடத்தில் கடந்த ஒரு மாத காலத்தில் ஆறு இளம் ஜோடிகள் பெற்றோர்களுக்கு தெரியாமலே வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இவ்ஜோடிகளில் ஒருசிலர் பெற்றோரால் பிரிக்கப்பட்டுள்ளனரெனவும் ஒருசிலர் உறவினர்களால் சேர்த்து வைக்கப்பட்டுள்ளனரெனவும் தெரிவிக்கப்பட்டது.

பண்டைத்தரிப்பில் நடைபெற்ற இளம்பெண் கடத்தல் சம்பவத்தில் காதலனுடன் உதவிக்கு 'மெய்க்காப்பாளராக'ச் சென்ற நண்பன் ஒருவர் காதலனைக் காத்து நிக்க வைத்துவிட்டு அவர் காதலியைக் கடத்திச் சென்றுவிட்டாராம். இவர்கள் மட்டும் சங்கானைப் பொலிசாரிடம் மாட்டிக் கொண்டதாகத் தெரியவருகிறது. இந்த ஜோடிகளில் அதிகமானோர் மாணவர்களும் வேலையில்லாதவர்களுமாம்.

## ஆயுள்வேத வைத்திய சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை சித்த ஆயுள்வேத வைத்திய சங்க 37-வது வருடாந்த கூட்டமும் பொதுக்கூட்டமும் யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத வைத்திய கல்லூரி மண்டபத்தில் ஜூன் மாதம் 2-ம், 3-ம் தேதிகளில் நடைபெறும்.

திரு. ஏ. கே. குமாரசாமி, தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திரு. க. சிவலிங்கம், 'சித்தவைத்தியமும் பாம்புக்கடியும்' என்னும் பொருள்பற்றி சிறப்புரை வழங்குவார்.

இரண்டாவதுநாள் நிகழ்ச்சியில், பண்டிட் ஏ. டபிள்யூ. வில்லியம் அல்விஸ், 'ஆயுள்வேத வைத்தியர்கள் ஒழுக்கவிதி' என்னும் பொருள் பற்றி உரைநிகழ்த்துவார். 'மானசரோகம்' என்னும் பொருள்பற்றி டாக்டர் சி. வ. சந்திரசேகர் உரை நிகழ்த்துவார்.

# "ஆறுமுகம் சுட்டதாக இறந்தவர் சொன்னர்"

குரும்பசிட்டி, புதன்

"சம்பவதினம் நிற்சாமம் பகுதியில் நடந்த சம்பவம் பற்றித் தகவல் கிடைத்ததையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்றபோது காணஞ்சென்றவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீட்டில் கிடப்பதாக அறிந்தேன். வீட்டிற்குச் சென்றபோது இரத்தக் காயங்களுடன் அறிவுள்ள நிலையில் இறந்தவர் கிடந்தார். நான் விசாரித்தபோது இரண்டாம் எதிரி ஆறுமுகம் தன்னை சுட்டதாகத் தெரிவித்தார். அபாயகரமான நிலையில் இறந்தவர் காணப்பட்டதாக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தேன்."

சங்கானை குமரேசன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் வி. டயஸ் மேற்கண்டவாறு கூறினார்.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் குறுக்குவிசாரணையின் பின் வழக்கு மேல் விசாரணை அடுத்த மாதம் 4-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. எதிரிகள் ஐவரும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் பெப்ரவரி மாதம் முதல் திகதி சங்கானை வாசியான வன்னியன் குமரேசன் என்பவரைக் கொலை செய்ததாகவும் மற்றும் நான்கு குற்றச்சாட்டுகளின் பேரில் செல்வரத்தினம், ஆறுமுகம், நடேசு, சுப்பையா, சுப்பிரமணியம் ஆகியோர்மீது சங்கானைப் பொலிஸாரால் இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே செல்வரத்தினம் ஆஜரானர்.

# வசாவிளான் கொலைவழக்கில் எதிரிதரப்பினரின் விண்ணப்பம்

குரும்பசிட்டி, புதன்

மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் வசாவிளான் கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஸ்தல மரண விசாரணையின் போது சாட்சியமளித்த இறந்தவரின் மகன் கந்தசாமியை குறுக்கு விசாரணைசெய்ய எதிரிதரப்பிற்குச் சந்தர்ப்பம் வழங்கக்கோரி விண்ணப்பித்தார் இவ்விண்ணப்பத்திற்கான உத்தரவை அடுத்த மாதம் 8-ந் திகதி தெரிவிப்பதாக நீதிபதி அறிவித்தார்.

விசாரணையின்போது கதிரிப்பிள்ளை அம்பிகாபதி என்ற இளைஞனும் சாட்சியமளித்தார். எதிரியைத் தொடர்ந்து றிமாண்டில் வைக்க உத்தரவிட்ட நீதிபதி மேல் விசாரணையை அடுத்த மாதம் 18-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வருடம் ஏப்ரல்மாதம் 9-ந் திகதி வசாவிளானைச் சேர்ந்த தம்பிமுத்து இராமு என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாக காங்கேசன்துறைப் பொலிசாரால் வி சுப்பிரமணியம் என்பவர் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

எதிரி தரப்பில் அட்வகேட் ரி. டபிள்யூ. இராசரத்தினம், அட்வகேட் வி. நல்லையா, அட்வகேட் நடராசா புறக்டர்களான ஆர். ஜே. செல்வரத்தினம், பி. தம்பிரத்தினம், வி. சிறீதரன் ஆகியோரின் உதவியுடன் ஆஜராகினர்.

# நாவலர் பற்றி ஆங்கிலநூல் வெளியிட முடிவு

உடுப்பிட்டி, புதன்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்குச் சிலையெடுக்க வேண்டுமென்ற கோஷம் எழுப்பப்படும் இவ் வேளையில் அதனை நாம் வரவேற்றபோதிலும் நாவலரின் உருவத்தை மக்கள் அறிவதிலும் பார்க்க அவரது கருத்துக்களையும் சேவைகளையும் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். இதனை நோக்கமாகக் கொண்டே மிகவிரைவில் நாவலர் பற்றிய விரிவான ஒரு நூலை ஆங்கிலத்தில் வெளியிட முடிவுசெய்துள்ளோம். நாவலர் தம் நாட்டிற்காகவும் சமய மறுமலர்ச்சிக்காகவும் தாய்மொழி வளர்ச்சிக்காகவும் உழைத்த ஒரு தேசிய வீரர் என்பதை வெளிநாட்டவர்கள் எற்கத் தயங்குவதாகக் குறைகூறக் கூடாது. நாம் அவர்களுக்கு நாவலரைப் பற்றி அறியும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்காதது எமது தவறே.

இவ்வாறு இலங்கைச் சட்டக் கல்லூரி இந்து மகாசபைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. வீ. கே. நீலகண்டன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் நாவலரின் பணியில் தமிழ் இளைஞர்கள் முன்நிற்கியருர்கள். நாவலரின் பெருமையை உலகுணரச் செய்யவேண்டுமென்னும் நோக்குடன் வழக்கறிஞமாணவர் திரு. கே. எஸ். மகேசன் எழுதியுள்ள நூலை வெளியிடத் தீர்மானித்துள்ளோம் இதற்குச் சைவசமய அபிமானிகள் ஊக்கம் தரவேண்டும். இம் முயற்சி பல கஷ்டங்களுக்கிடையே ஈடேறியுள்ள பொழுதிலும் நாம் கஷ்டத்தை உணரவில்லை. நாவலர் பெருமானின்பணி வாழ்வில் சுபீட்சமூட்டும் என்று கூறினார்.

## 6 பேருக்கு தொடர்ந்து றிமாண்ட்

குரும்பசிட்டி, புதன்

வசாவிளான் குட்டியப்புலவாசியான கணபதி சடையன் என்பவரை இவ்வருடம் ஜனவரி மாதம் 26-ந் திகதி கொலை செய்ததாக கே. துரையன், ஈ. பொன்னன், பீ. இரத்தினம், எஸ். பொன்னன், சே. சின்னத்துரை, வள்ளி சரவணை ஆகியோர்மீது தொடரப்பட்டிருந்த வழக்கு மல்லாகம் நீதிபதி திரு எம். சண்முகலிங்கம் முன்னிலையில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டபோது எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தமது தொகுப்புரையை நிகழ்த்தினார். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிரிகளை விடுதலை செய்யுமாறும் வழக்கறிஞர் கோரினார்.

பொலிஸ் தரப்பில் வழக்கு விசாரணை முடிவுறுதலை அடுத்து நீதிபதி எதிரிகளைத் தொடர்ந்து றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு மேல் விசாரணையை அடுத்த மாதம் 8-ந் திகதிக்கு ஒத்திவைத்தார். அன்று தீர்ப்பு வழங்கப்படவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணக் கல்லூரி

## பட்டதாரி வகுப்புப் பகுதி

விஞ்ஞான, கலை[உயர்தர] பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சைக்கான முதலாம் வருட வகுப்புகள் ஜூன் மாதம் ஆரம்பமாகும். விஞ்ஞான வகுப்பிற்கு மாணவர் பிரவேசப் பரீட்சை மூலம் தெரியப்படுவர்.

இவற்றிற்கான விண்ணப்பப்பத்திரங்களையும், பிறதகவல்களையும் சொந்த முகவரியுடன் கூடியதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான நீண்ட கடித உறையும், 50 சதப் போஸ்டல் ஓடரும் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பப் பத்திரங்கள் 1-6-68 திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவாளர்.
வட்டுக்கோட்டை.
696

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்
நெற்குற்றும் ஆலை

## நெற்குற்றும் ஆலை கூலி ஒப்பந்தம்

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் சுன்னாக நெற்குற்றும் ஆலையில் நெற்குற்றும் ஆலை தொடர்பான கூலி ஒப்பந்தம் செய்வதற்கு கேள்விப் பத்திரங்கள் வரவழைக்கப்படுகின்றன. மேற்படி பத்திரங்களை அலுவலக நேரங்களில் சமாசத்திடம் ரூபா 50/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தத்திற்குத் தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தகாரர் பிணையாக ரொக்கம் ரூபா 1000/- ஆதனப் பிணையாக ரூபா 4000/- செலுத்தவேண்டும். கேள்விப் பத்திரங்கள் முடிவு திகதி 9-6-68 பகல் 12 மணி.

698 காரியதரிசி.

இன்று மட்டும்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜிகணேசன் நடிக்கும்
மனோகரா

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்

## கேள்விப் பத்திரம்

மேற்படி சமாசம் சுன்னாகம் நெற்குற்றும் ஆலையில் தவிடு விற்பனை செய்வதற்கு இருக்கிறது. தயவுசெய்து தவிட்டைப் பார்வையிட்ட பின்னர் எங்களுக்கு, தங்கள் கேள்வியை அந்தர் கிகிதப்படி 2-6-68 மாலை 4-30-க்கு முன்னர் பதிவுத்தபாலில் அறிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

காரியதரிசி.
697

முல்லைத்தீவுப் பட்டின சபை

## கேள்வி விளம்பரம்

1968-ம் ஆண்டு ஆனி மாதம் 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00மணி வரை கொக்குப்பிட்டியில் சேரி ஒழிப்புத்திட்ட விடுகள் கட்டிக் கொடுக்கும் வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கேள்வி விண்ணப்பப் பத்திரப் பணம் ரூபா 5-00.

2. கேள்விக் கட்டுப்பணம் ரூபா 50-00.

மேலதிக விபரங்கள் யாவும் சபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

அ, சந்தியாப்பிள்ளை,
தலைவர்,
பட்டின சபை,
699 முல்லைத்தீவு.

MANOHARA JAFFNA
Daily: 4-45, 7-00 & 9-45 P.M.
Dean Martin, Anita Exberg, Frank Sinatra
in
Four For Texas

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
John Saxon
Bronwyn Fitzsimons
in
THE RAVAGERS
(Adults only)

## ஜூன் 10-ல் முடிவடையும்

உடுவில், புதன்

வலிகாமம் வடக்கு உடுவில் பகுதி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடாத்தப்படும் இரண்டாவது ஆண்டு விளையாட்டு விழாக்கள் இம்மாதம் 18-ம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

உடுவில் பகுதியிலுள்ள எட்டுக் கிராமசேவையாளர் பிரிவிலிருந்தும் சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், மற்றும் பல ஸ்தாபனங்களும் இப்போட்டிகளில் கலந்துகொண்டு விளையாடிவருகின்றன.

தாச்சிப்போட்டி, மென்பந்துக் கிரிக்கெட், பாட்மின்டன், கரபந்தாட்டம், மாட்டுவண்டிச்சவாரி, கயிறு இழுத்தல், அஞ்சலோட்டம், சைக்கிள் ஓட்டம் போன்ற பல பிரிவுகளாக நடைபெறும் இவ்விளையாட்டுப் போட்டிகள் ஜூன் 10-ம் திகதியுடன் முடிவடைகின்றன.

## ஜனசக்தி வெற்றி

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர் அரசடி வீதி ஜனசக்தி சனசமூக நிலையத்திற்கும் ஆத்திப்புலம் கலைமகள் சனசமூக நிலையத்திற்குமிடையில் நடைபெற்ற மென்பந்தாட்டப் போட்டியில் ஜனசக்தி சனசமூக நிலையம் 3 விக்கெட் 33ஓட்டங்களால் கலைமகள் சனசமூக நிலையத்தினரை தோற்கடித்தது. கலைமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற இவ்விளையாட்டுப்போட்டிக்கு மத்தியஸ்தர்களாக கி. குமாரசாமி, மா. தியாகராசா ஆகியோர் கடமையாற்றினர்.

## சிரமதானம்

சங்கானை, புதன்

சங்கானை வெல்லில் முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு சங்கானை இந்து வாலிபர் சங்கத்தார் சிரமதானமூலம் கோவில் வீதிகளைச் சுத்தம் செய்தனர்.

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர், பாரதி, சோ
நடித்த
நான் யார் தெரியுமா?

## விளையாட்டுப் போட்டி

வவனியா, புதன்

வவனியா மாவட்ட மகா வித்தியாலயங்களின் மெய்வல்லுநர் போட்டிகள் இம்மாதம் 29-ம், 30-ம் திகதிகளில் வவனியா மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

29-ம் திகதி காலையில் தேகப்பயிற்சிப் போட்டியும், 30-ம் திகதி காலையில் தாளஅபிநயப்பயிற்சிப் போட்டியும், மாலையில் மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டியும் நடைபெறும்.

* * *

சுழிபுரம், புதன்

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை விளையாட்டுப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது வள்ளுவர் இல்லம் 121 புள்ளிகளை பெற்று முதலாவது இடத்தையும் பாரதி இல்லம் 120 புள்ளிகளைப்பெற்று இரண்டாவது இடத்தையும் சுவீகரித்தன.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வைத்திலிங்கம் பரிசில்களை வழங்கினார்.

### விற்பனைக்கு

பருத்தித்துறை பத்திரகாளி வீதியில் மூன்று அறைகள் கிணறு அடங்கிய வீடு விற்பனைக்கு உண்டு. C. W. E.க்கு அண்மையில் விபரங்களுக்கு வி. வடிவேலு, பத்திரகாளிவீதி, பருத்தித்துறை. 1321

வீடும் காணியும்:
பண்டத்தரிப்பு பிரதான வீதி, சந்தைக்கருகாமையில் 20 பரப்புக் காணி: வீடு, கிணறு ஆகியவற்றுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: மத்தேசுப்பிள்ளை, கபிரியேல்பிள்ளை, பிரதான வீதி, பண்டத்தரிப்பு. 1318

காணி:
மா, தென்னை, கிணறு முதலியவற்றுடன் கூடிய மூன்று பரப்புக் காணி நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் விற்பனைக்கு உண்டு. விளம்பர இல. 1324, 'ஈழநாடு' மேற்பார்த்து, த. பெ. என் 49, யாழ்ப்பாணம். 1324

கடைகள்:
ஊர்காவற்றுறை அரசு பொன் புனித செபஸ்தியார் கோவில் முன் றோட்டுக்கருகாமையில் அமைந்திருக்கும் மூன்று கடைகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு P. ஜேம்ஸ் ஸ்தாபனம், பிரதானவீதி, பண்டத்தரிப்பு. 1315

## வரி விளம்பரம்

### கல்வி

வகுப்புகள்:
ஜி. சி. ஈ. (சாதாரணம்) கலை / விஞ்ஞானம் / வர்த்தகம் / சிங்கள காலை / மாலை வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யாழ்ப்பாண டியூடோறியல் கல்லூரி, 60, அரசடி வீதி, (தட்டாதெரு சந்தி), யாழ்ப்பாணம். 1322

சிங்களம்:
சிங்களத்தில் முதலாந்தர ஆசிரிய தராதரப் பத்திரத்தையும், சிங்களத்தில் லண்டன் பட்டதாரிப் பத்திரத்தையும் பெற்ற மாதர்களை தெய்வயானையம்மாளும், மற்றும் சிறந்த ஆசிரியர்களாலும் சிங்களப் பாடம் காலை 6 தொடக்கம் மாலை 8 வரைக்கும் தனித்தனியே கற்பிக்கப்படுகின்றன. உடன் சேர்ந்து படிக்கவும். வேலுப்பிள்ளை, வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை. 1304

தையல்:
ஆரம்பத்திலிருந்து இயந்திரப் பூவேலை செய்தல், சிற்பியினால் உருவம் செய்தல், விஞ்ஞான முறையில் வெட்டுதல் வரை, தினசரியும்; விசேட வகுப்புகள் விடுமுறை, போயா, போயாவுக்கு முதல் நாட்களிலும் கற்பிக்கப்படுகின்றன. உடன் சேர்ந்து படிக்கவும். வேலுப்பிள்ளை, வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 1308

மார்கழி க. பொ. த. (சாதாரண) வர்த்தக தராதரப்பத்திரப் பரீட்சைகளுக்கான சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகமும் நிதியும், வர்த்தக எண் கணிதம், பொருளாதாரம் முதலிய பாடங்கள் ஆறுமாத பிரத்தியேக வகுப்புக்கள் ஆனி தொடக்கம் கற்பிக்கப்படும். விடுதி வசதியுண்டு. உடன் விண்ணப்பிக்கவும். வேலுப்பிள்ளை, வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை. 1305

### ஆசிரிய பயிற்சி

பலாலி ஆசிரிய விசேட பயிற்சி விண்ணப்பப் படிவத்திற்கு 5 பத்து சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். வர்த்தக கல்வி நிலையம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். 1319

### தேவை

பிரகாஷ் சலவைத் தொழிற்சாலைக்கு ஒரு காஷியர் தேவை. பிணைப்பணத்துடன் நேரில் வரவும். நேரம் காலை 9—5 (2-6-68) நேரில் வரவும். பிரகாஷ் சலவைத் தொழிற்சாலை, 222, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 1320

சென்னையில் 100 நாட்களுக்கு ஓடிய சிறந்த வள்ளுவ காவியம்!

கெப்பிடல்
(கொழும்பு)
2-00, 6-00, 9-30
'அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியார் பிறர்க்கு'

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-30
இதற்கு நீங்கள் சொல்லப்போகும் பதில்

மக்கள் திலகம்
எம். ஜி. ராமச்சந்திரன்
சரோஜாதேவி
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
பேபி ஷகிலா
தங்கவேலு
நடித்த

முத்துக்குமரன் பிக்சர்ஸ் அளிக்கும்



# பெற்றால்தான் பிள்ளையா?

டைரக்ஷன்: கிருஷ்ணன்-பஞ்சு

நவாலியூர்
பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணிய ஐயர் அவர்கள்
கூறுகிறார்கள்!

சுந்தரம் பிறதர்ஸ்
ஸ்தாபனத்தாரால் விநியோகிக்கப்படும்

## பச்சை சந்தனம்

கோவில் தேவைகட்கும்
மற்றும் மங்களக் காரியங்களுக்கும் சிறந்தது.
இறைவன் திருமேனியில்
சந்தனக் காப்பிட்டு
அவனின் திருவருளைப் பெறுவதற்கும்
சிறந்த வஸ்துவாக அமைகிறது.

சுந்தரம் பிறதர்ஸ்
(கோவில் அபிஷேக திரவிய வியாபாரிகள்)
73, மின்சாரநிலையவீதி—யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள இனத்துக்குபெரும் தீங்கு மாவட்டசபை

## முழு மூச்சுடன் எதிர்க்கவேண்டும் என்கிறார் திருமதி சிறிமா

காலி, புதன்

"பெரும்பான்மையின ரான சிங்களமக்கள் மட்டு மன்றி முஸ்லிம்களும் தமிழர்ளில் ஒரு பகுதியினரும் ஏற்கெனவே மாவட்டசபை மசோதாவை எதிர்த்துள்ளார்கள். ஆனால் செல்வநாயகத்திற்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்று வதற்காகவும், தமிழரசுக்கட்சியினரை திருப்திப்படுத்துவதற்காகவும் பிரதமர் இம்மசோதாவைக் கொண்டு வரக்முயற்சிக்கிறார்."

காலி நகரமண்டப மைதானத்தில் நடந்த சுதந்திரக் கட்சி கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா மேலும் கூறியதாவது: மாவட்டசபை மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அது சிங்கள இனத்திற்கு பெரும்தீங்காக இருக்கும். மக்கள் மௌனமாக இருந்தால் இம்மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுவிடும். ஆளும் கட்சி எம்.பி. க்களை, இம்மசோதாவிற்கு ஆதரவாக வாக்களிக்கக்கூடாதென மக்கள் வற்புறுத்தவேண்டும்.

கெவிநுவர எம்- பி. திரு. ரோணி டீ மெல் பேசும்போது, எதிர்க்கட்சியினர், மாவட்டசபை மசோதாவையும், வெள்ளை அறிக்கையையும் எதிர்ப்பார்கள் என்று கூறினார்.

முல்கிறிகல எம். பி. திரு. ஜோர்ச் ராஜபக்ஸ பேசும்போது மாவட்டசபை மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும், மக்கள் அதனை அமுல் நடத்த விடமாட்டார்கள் என்று கூறினார்.

# ஐயாறன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

வந்து அல்திவாரக்கல் நாட்டியதாயும், சுவாமி ஜீவனானந்தா தெரிவித்தார். இந்த தர்ம கைங்கரியத்துக்குப் பொதுமக்கள் நன்கொடை அளிக்கவேண்டும் என்று கேட்டுள்ளார்.

மக்கள் பணிக்காகத் தம்மையே அர்ப்பணிக்கும் துறவிகள் இந்த சமயத்தில் மிகமிகக் குறைவு. ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் இக்குறையை ஓரளவு பூர்த்தி செய்கின்றது. வடபகுதி உள்ளிட்டு, இலங்கையின் எப்பகுதியிலும் இருந்தும் அநாதை மாணவர்களை இங்கு அனுப்பிவைக்கலாம். இதற்கு உதவும் பணத்துக்கு வருமான வரி விலக்கும் உண்டு.

இந்த நல்ல கைங்கரியத்துக்கு உதவுபவர்கள் வடக்கு-கிழக்கு ஒற்றுமையையும் நல்லுறவையும் பலப்படுத்துபவர்களாவர். இதற்கு உதவுபவர்கள், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் கல்லடி உப்போடை, மட்டக்களப்பு என்ற விலாசத்திற்கு அனுப்பி, பெரும் புண்ணியம் பெறலாம்.

ஃ ஃ ஃ

பெருகும் புனல் அன்னமலை பிறைசேர் கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார் பொடி அணிவாரது பருகிக்
கருகும் மிடறுடையார் கமழ் சடையார் கழல் பரவி
உருகும் மனம் உடையார் தமக்குறுநோயடையாவே

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

# கடத்தல் வழக்கு

குரும்பசிட்டி, புதன்

இணுவில் இளம் பெண் கடத்தல் வழக்கு மேல் விசாரணைக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. எம். சண்முகலிங்கத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இணுவிலைச் சேர்ந்த வசந்தகுமாரி இராஜதுரை என்ற இளம் பெண்ணை காரில் கடத்திச் சென்றதாக சுன்னாகம் பொலிஸார் இந்த இளம் பெண்ணின் மைத்துனர்களான கணேசலிங்கம், கனகரத்தினம் ஆகியோர் உட்பட மூன்று பேர் மீது குற்றஞ்சாட்டி இவ் வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 30-5-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வளை 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்,

344 மீற்றர் அன் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

மாலை 5-00 கல்விச்சேவை, 5-15 பிறந்தினவாழ்த்துக்கள், 5-30 ஞானமஞ்சரி.

இரவு 6-15 தாளவாத்தியக்கச்சேரி — கே. சண்முகம்பிள்ளை, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 கருத்துமேடை, 8-30 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பல்கலைக்கழக மாணவருக்கான விரிவுரை, 9-45 உரைச்சித்திரம், 10-15 தேர்ந்தஇசை.

# உப சபாநாயகர் கோரிக்கை

உடுப்பிட்டி, புதன்

"அதிபர்களுக்கும், தமிழ் மகாவித்தியாலய அதிபர்களுக்கும் 55 வயதுக்கு மேல் பதவி நீடிப்பு வேண்டுமானால் சிங்களத் தேர்ச்சி பெறவேண்டுமென்று கல்விக் கந்தோரில் சில அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளது நியாயமற்ற பாரபட்சமான செயலாகும். இந்நியதியை நீக்கப்படவேண்டும். இவ்விஷயத்தில் கவனமெடுக்காவிடில் தமிழர்கள் கஷ்டமடைய வேண்டி நேரிடும்."

இவ்வாறு உப சபாநாயகரும், உடுப்பிட்டி எம். பி.யுமான திரு. மு. சிவசிதம்பரம் கல்வியமைச்சுக்கும், பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவுக்கும் கடித மூலம்கோரியுள்ளார்.

# பத்திரிகை படிக்கையில் தீ பற்றியதாம்

## இளம் பெண் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், வியா.

பத்திரிகை படித்துக் கொண்டிருக்கும்போது நெருப்புப் பற்றியதால் எரிகாயங்களுக்குள்ளான இளம் பெண்ணொருவர் அபாயகரமான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் அரியாலை பாரதி வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் தில்லைநாயகி [32 வயது] என்பவரே எரிகாயங்களுக்குள்ளானவராவார்.

இரவு படுத்திருக்கும்போது பத்திரிகை படித்துக் கொண்டிருந்ததாகவும், அருகிலிருந்த விளக்கு பத்திரிகையில் பற்றி இவரது உடலிலும் பற்றியதாக பொலிஸார் நடாத்திய விசாரணையில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

[கா. நி.]

# உபசபாநாயகருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம்.பி. யுமான திரு. மு சிவசிதம்பரத்துக்கு வடமராட்சித் தமிழாசிரியர்சங்கம் பாராட்டு வைபவமொன்றை வரும் திங்கட்கிழமை 3-ம் திகதி நடத்தவிருக்கிறது. இவ்வைபவம் கரவெட்டி திருஇருதயக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கொழும்புநகரில்

# 17 வயது வாலிபர் கடத்தப்பட்டார்

கொழும்பு, புதன்

பட்டப்பகலில் 17 வயது வாலிபனொருவன் கடத்தப்பட்டான். இச்சம்பவம் நேற்று கொழும்பு நகரில் நடந்தது. இக்கடத்தல் சம்பந்தமாக பொலிசார் தீவிரமாக விசாரணைசெய்து வருகின்றனர்.

புத்தூர் இராமசபை

# தமிழ் காங்கிரஸில் ஐவரும் தமிழரசில் நால்வரும்போட்டி

## 5 பேர் போட்டியின்றித் தெரிவு

யாழ்ப்பாணம், வியா.

புத்தூர் கிராமசபைக்கு ஐந்து அங்கத்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

நேற்றுக்காலை புத்தூர்க் கிராமசபை மண்டபத்தில் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. முதல் தடவையாக இக்கிராமசபைக்கு கட்சி சார்பில் அபேட்சகர்கள் போட்டியிட்டார்கள். தமிழ்க் காங்கிரஸ்சார்பில் 5 பேரும் தமிழரசுக் கட்சியின் சார்பில் 4 பேரும் போட்டியிடுகிறார்கள்.

போட்டியிடுபவர்களின் விபரம்:

1-ம் வட்டாரம்: மு. கிட்டிணன் [த. கா], சி. நராணி, க. சண்முகநாதன் [த. அ]

2-ம் வட்டாரம்: சி. நடராசா [த. கா], செ. சிவசம்பு.

3-ம் வட்டாரம்: ச. பரமு. செ. சதாசிவம், வ. பொன்னம்பலம்.

4-ம் வட்டாரம்: செ. பதிமநாதன், ஏ. சிவபாலன்.

5-ம் வட்டாரம்: கே. கந்தசாமி [போட்டியில்லை[.

6-ம் வட்டாரம்: கே. இராசையா [த. அ], எஸ். செல்வரத்தினம், கே. செல்லையா, கே. கணபதிப்பிள்ளை.

7-ம் வட்டாரம்: எஸ். சுந்தரமூர்த்தம், எஸ். கதிரவேலு, ஆர். செல்லத்துரை, கே. தாளையா. எஸ். துரைராசா.

8-ம் வட்டாரம்: எஸ். பூபாலன், ரீ. சண்முகம் [த. கா]

9-ம் வட்டாரம்: எஸ். அரியகுட்டி, என். மகேசன், ஈ. நாராணி, கே. தம்பிராசா.

10-ம் வட்டாரம்: எஸ். கந்தசாமி, க. சின்னத்துரை [த. அ]

11-ம் வட்டாரம்: ப. குகதாசன் [போட்டுயில்லை]

12-ம் வட்டாரம்: பெ. சின்னத்தம்பி [த. கா], கி. கிட்டிணன், ப. மாதன்.

13-ம் வட்டாரம்: சி கிட்டிணன், மு. திருநாவுக்கரசு [த. கா]

14-ம் வட்டாரம்: சி சிவசம்பு [போட்டியில்லை]

15-ம் வட்டாரம்: இ. செல்லையா [போட்டியில்லை]

16-ம் வட்டாரம்: ஆ. கயிலாசபிள்ளை (போட்டியில்லை)

17-ம் வட்டாரம்: ஏ. கந்தசமி (த. அ. அ. இராசரத்தினம்.

# ஆணையாளர்...

[11ம் பக்கத் தொடர்ச்சி]

புரட்சி ஏற்பட்டது போல இங்கும் வாலிபர் புரட்சி ஏற்பட்டால்தான் நாம் பொது சன உரிமைகளைப் பெறமுடியுமென்றும், வழக்கறிஞர் ஸ்ரீகரன் பேசுகையில் ஜனநாயக உடமைகளைப் பெற புரட்சி தான் சிறந்த வழியென்றும் தெரிவித்தார்கள்.

திருவாளர்கள் அ. விசுவநாதன், இராசையா, குமாரசாமி, டொமினிக்ஜீவா ஆகியோர் உட்பட இன்னும் பலர் பேசினார்கள் [கா. நி.]

# எதிரி விடுதலை

குரும்பசிட்டி, புதன்

அட்டோனி ஜெனரலின் உத்தரவையடுத்து மூளாய் கொலைமுயற்சி வழக்கின் எதிரியை மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் விடுதலை செய்தார். மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கு விசாரணை முடிவில் உயர்நீதிமன்ற விசாரணைக்கு பாரப்படுத்தப்பட்டிருந்தது.

மூளாய்வாசியான என். கந்தசாமி என்பவர் அதேயிடத்தைச் சேர்ந்த சிவபாக்கியம் கிட்டிணன் என்ற பெண்மணியை கத்தியால் வெட்டிக் கொலைசெய்ய எத்தனித்தாகசகிகாலைப்பொலிசார் இவ் வழக்கைத் தொடர்ந்திருந்தனர். மல்லாகம் கோர்ட்டில் எதிரி சார்பில் புறக்டர் சிவ. சிறீதரன் ஆஜராகியிருந்தார்.

# ஜூலை மாதத்தில் பூர்த்தியாகும்

யாழ்ப்பாணம், வியா.

காங்கேசன்துறையில் கட்டப்பட்டுவரும் புதிய துறைமுகத்தின் கட்டட வேலைகள் ஜூலை மாதத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கட்டட வேலைகள் முழுமையாக நிறைவுபெற்றதும் இன்னும் மேலதிகமான சரக்குக் கப்பல்களை காங்கேசன்துறைக்குஅனுப்ப உணவு அமைச்சு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் எனவும் வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா நேற்று முன்தினம் தெரிவித்தார். [கா. நி]

# தற்கொலை செய்ய முயன்றார்

குரும்பசிட்டி, புதன்

சங்கானைப் பொலிஸாரால் மல்லாகம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட கந்தையா செல்லையா என்பவர் தற்கொலை செய்ய முயற்சித்த குற்றத்தை ஒப்புக்கொண்டார். நன்னடத்தைப் பாதுகாவலரின் அறிக்கையைக் கோரி மாஜிஸ்திரேட் எதிரிக்கு தீர்ப்பு வழங்குவதை அடுத்த மாதம் 25-ந் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்(

கொக்குவில் கி. ச. தேர்தல்

# 6 பேர் கட்டுப்பணத்தை இழந்தனர்

## ஒருவருக்கு ஒருவாக்கும் இல்லை

யாழ்ப்பாணம். வியா

கொக்குவில் கிராமசபையின் 16 வட்டாரங்களில் 13 வட்டாரங்களுக்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. 13 வட்டாரங்களிலும் மொத்தம் 6 பேர் கட்டுப்பணத்தை இழந்தனர்.

இவர்களில் ஒருவர் ஒரு வாக்குமட்டும் பெற்றதும் மற்றொருவர் ஒரு வாக்குக் கூடப் பெறாததும் குறிப்பிடத்தக்கதாகும். போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம் நடராசா அருணாசலம் [281] சொர்ணலிங்கம் ஆறுமுகம் [134]

2-ம் வட்டாரம்: செ. ஆறுமுகம் (283), அ. சண்முகநாதன் [100]. க. குமாரசாமி (26)

3-ம் வட்டாரம்: மு. பொனவரத்தினம் [225], சி. கந்தையா [153] சதாசிவம் இராசதுரை [154]

4-ம் வட்டாரம் எஸ். பொன்னையா (போட்டியின்றித் தெரிவு]

5-ம் வட்டாரம்: இ. சதாசிவம் [192], அ. செல்வரத்தினம் [87] கா. பொன்னையா (83), மா. குகைமுத்து [36] சகஸ்ரநாம [illegible] [00]

6-ம் வட்டாரம்: [illegible] இரத்தினம் [272] சி. பொ. வேலாயுதபிள்ளை [269]

7-ம் வட்டாரம்: அந்தோனிப்பிள்ளைதம்பிராஜா (268] மா. கந்தையா [256]

8-ம் வட்டாரம்: கனகரத்தினம் சிவகுரு [232] க. சுப்பிரமணியம் [117] த. சோமசுந்தரம் [64]

9-ம் வட்டாரம்: மு. சிவஞானசுந்தரம் [327] செல்வராஜா கனகலிங்கம் [304] தி, மகேஸ்வரன் [01]

10-ம் வட்டாரம்: பெ. கனகசபாபதி [453] க. சண்முகநாதன் [317]

11-ம் வட்டாரம்: எஸ். பதமநாதன் [போட்டியின்றித் தெரிவு]

12-ம் வட்டாரம்: சி. க. சபாபதி [268] சு. சற்குணநாதன் [248] செல்வத்துரை ஆறுமுகம் [03]

13-ம் வட்டாரம்: பொ. முத்துத்தம்பி.[458] இராமசாமி இளையதம்பி [138] க. வேலுப்பிள்ளை [248]

14-ம் வட்டாரம்: சி. பத்மநாதன் [256] வி. சின்னத்துரை [174] சிவரத்தினம் கருணாகரன் இளையதம்பி [42]

15-ம் வட்டாரம்- எஸ் இரத்தினசிங்கம் (போட்டியின்றித் தெரிவு)

16-ம் வட்டாரம்: வ. பரமலிங்கம் [391] தியாகராஜா மாணிக்கம் (311)

[கா. நி]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org